**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.33/2024**

2025 -ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr-III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 12.08.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கிருஷ்ணகுமார் (PW-1) | வயது | : | 63 /2025 |
| க/த பெயர் | : | திரு. வெங்கடாசலம் | தொழில் | : | அரசு ஊழியர் (ஓய்வு) |
| முகவரி | | அஸ்தினாபுரம், சென்னை | வட்டம் | : | சென்னை |

1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களில் எதிலாவது ராமன் செருமடார் பெயரில் இருந்தது என்பதற்கான பதிவு செய்யப்பட்ட ஆவணங்களோ வருவாய் ஆவணங்களோ உள்ளதா என்றால் இல்லை. ராமன் செருமடார் பெயரில் தாவா சொத்துக்கள் இருந்தது என்பததை காட்டுவதற்கான எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) 1ம் பிரதிவாதி அம்சவள்ளி, 2ம் பிரதிவாதி செந்தில்குமாருக்கு தாவா சொத்துக்களை வா.சா.ஆ.2 கிரய ஆவணம் மூலம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

3) இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன் தாவா சொத்தானது யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் வில்லங்க சான்றிதழ் மட்டும் பார்த்தேன், பட்டா யார் பெயரல் இருந்தது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன் தாவா சொத்தானது யார் பெயரில் வருவாய் ஆவணங்களான சிட்டா, நகர நிலப்பதிவேடு யார் பெயரில் இருந்தது என்றால் அதை நான் பார்க்கவில்லை.

4) நான் தாவா சொத்து குறித்து வில்லங்க சான்று எடுத்து பார்த்ததில் எந்த இடத்திலாவது தாவா சொத்தானது ராமன் செருமடாருக்கு சொந்தமானது என்பதற்கான பதிவுகள் இருந்ததா என்றால் இல்லை. வா.சா.ஆ.1

ஆவணத்தில் முந்தைய பதிவு குறித்த இடத்தில் 14 வது காளத்தில் எந்த ஆவணமும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

5) 1ம் பிரதிவாதிக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டதன் பேரில் கிடைக்கப்பட்ட சொத்தினை 2ம் பிரதிவாதிக்கு கிரயம் எழுதி கொடுக்கும்போது அரசாங்கத்தால் கொடுத்த குடியிருப்பு ஒப்படைப்பு பட்டாவை இணைத்துதான் கொடுத்தன் அடிப்படையில் கிரய ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

6) 26.07.2022 தேதியிட்ட ஆவணத்தில் கூடுதல் பக்கங்கள் 22 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அதே ஆவணமானது வா.சா.ஆ-2 ஆக தாக்கல் செய்ததில் முதல் 9 பக்கங்கள் மட்டுமே தாக்கல் செய்து வா.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மொத்தம் உள்ள 22 பக்கங்களில் முதல் 9 பக்கங்கள் மட்டுமே எனக்கு சாதகமாக இருப்பதால் மீதமுள்ள பக்கங்களை நீக்கிவிட்டு எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

7) நீதிமன்றத்தில் உண்மை விபரங்களை மறைப்பதற்காக 22 பக்கம் கொண்ட ஆவணத்தை குறியீடு செய்யாமல் 9 பக்கம் கொண்ட ஆவணத்தை மட்டுமே குறியீடு செய்ததால் இந்த ஆவணம் குறைபாடு உடையது என்றால் சரியல்ல.

8) நீதிமன்றத்தில் பரிகாரம் கோரும்போது உண்மையான நிலவரத்தை சொல்லிதான் பரிகாரம் கோர வேண்டும், தவறான விபரத்தை சொல்லி நான் பரிகாரம் கேட்டுள்ளதால் நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

9) என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள உயில் ஆவணமான வா.சா.ஆ-1 ஆவணம் ராமன் செருமடாரால் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணம் எழுதிய விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தினை கிரயம் செய்து கொடுத்துவிட்டார் என்ற ஆத்திரத்தில் என்னால் பின்னிட்டு பின் யோசனையின் பேரில், தயார் செய்யப்பட்ட உயில் ஆவணம் வா.சா.ஆ.1 என்றால் சரியல்ல.

10) வா.சா.ஆ.1 எழுதப்பட்ட விபரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 1987 ல் தெரியவந்தது. 1987 ல் உயில் பற்றிய விபரம் தெரிந்தும் தாவா சொத்து குறித்து எந்தவித வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான், நான் படித்துவிட்டு வேலை தேடிக்கொண்டு வந்ததால் நான் பெயர் மாற்றம் ஏற்படுத்தவில்லை. உண்மையிலேயே உயில் ஆவணம் ஏற்படாததால் தான் தாவா சொத்து எந்த வித பெயர் மாற்றமும் ஏற்படவில்லை என்றும் இந்த விபரத்தை மறைத்து வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11) வா.சா.ஆ.1 ஆவணமானது ராமன் செருமடாரால் வாங்கப்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கு சம்மந்தம் இல்லாத நபரால் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்னால் ஏற்படுத்தப்பட்டு இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டிது என்றால் சரியல்ல.

12) தாவா வழக்கினை தாக்கல் செய்யவோ, வா.சா.ஆ-2 ஆவணத்தை செல்லாது என விளம்புகை கோர எனக்கு எந்த வித சட்ட உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. ராமன் செருமடார் இறந்துவிட்டார் என்பதை நிரூபிக்க எந்த வித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

<u>3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

3,4 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எந்தவித பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். 3,4 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எந்தவித பரிகாரமும் கேட்காததால் தேவையற்ற நபர்களை இந்த வழக்கில் சேர்த்த தோசத்தால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.08.12 18:55:01 +0530

District Munsif
Mannargudi.